**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.**

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC.579/2006 |
| வழக்கு சாட்சி | : | PW 3 |
| நாள் | : | 15.06.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோவிந்தன் | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | நரசிம்மலு நாயுடு | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**எதிரிகள் ஆஜரில்லை**

**முதல் விசாரணை**

நான் வெங்கத்துர் கிராமத்தில் வசித்து வருகிறேன். எங்கள் தோட்டத்தில் சுமார் 24 வருடங்களுக்கு முன்பு காலை என் அண்ணன் மகள்கள் வேர்கடலை களை எடுப்பதற்காக சென்றபோது அங்கு பூண்டு செடிகளுக்கு இடையில் ஒரு ஆண் செத்து கிடப்பதாக எனக்கு தகவல் தெரிவித்தார் நான் சென்று பார்த்த போது ஒரு ஆண் பிரேதம் தலையிலும், மூக்கிலும் இரத்த காயத்துடன் இருந்தது. நான் எனது கிராம தலையாரி கணபதியிடம் சென்று சொன்னேன் அவர் வந்த பார்த்து விட்டு கிராம நிர்வாக அதிகாரியிடம் தெரிவிப்பதாக சொல்லி சென்று விட்டார். கிராம நிர்வாக அதிகாரி வாசுதேவன் அவர்களும் வந்து பார்த்து மணவாளநகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

**குறுக்கு விசாரணை -** இல்லை

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.

வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC.579/2006 |
| வழக்கு சாட்சி | : | PW 4 |
| நாள் | : | 15.06.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஏழுமலை | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | எட்டியப்பன் | தொழில் | : | |
| கிராமம் | : | வெங்கத்துர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**எதிரிகள் ஆஜரில்லை**

**முதல் விசாரணை**

நான் வெங்கத்துர் கிராமத்தில் வசித்து வருகிறேன். தற்போது ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறேன். சுமார் 24 வருடங்களுக்கு முன்பு நடந்த கொலை வழக்கில் தற்போது எனக்கு ஞாபகமில்லை ஆனால் போலிசார் என்னிடம் சில பேப்ரில் கையெழுத்து வாங்கினார்கள். நாங்கள் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தோம். மகேந்திரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், லெட்சுமிபதியும் கையொப்பம் செய்தோம் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் என்னுடையது தான். அது **அதசாஆ 3 ஆகும்.** அதே போல் கைபற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த கையொப்பம் **அதசாஆ 4 ஆகும்.** மேலும் அதே தினத்தில் அழகிரி தெருவில் எதிரி பிரியா என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **அது அதசாஆ 5 ஆகும்.** அதே போல் அதே தினத்தில் கெருகம்பாக்கம் பாரதிநகரில் நுறுமுகமதை கொடுத்த ஒப்புதல் வாக்கமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அது **அதசாஆ 6 ஆகும்.** அதே போல் மேற்கண்ட எதிரியிடமிருந்து கைபற்றப்பட்ட மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கைபற்றுதல் மகசர் **அதசாஆ 7 ஆகும்.**

அதன் பிறகு போலிசார் அவர்களை காவல்நிலையம் அழைத்து சென்றார்கள் இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வெங்கத்துர் கிராமத்தில் வசித்து வருகிறேன். தற்போது ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறேன். சுமார் 24 வருடங்களுக்கு முன்பு மணவாளநகர் காவல் ஆய்வாளர் என்னிடமும், எங்கள் கிராமத்தை சேர்ந்த லெட்சுமிபதி யிடமும் சுமார் 3 மாதங்களுக்கு முன்பு கொலை செய்த குற்றவாளிகள் வடபழனியில் இருப்பதாகவும் அவர்களை கைது செய்ய வேண்டுமென்றும் அதற்கு நீங்கள் சாட்சியாக இருக்க வேண்டுமென்று கேட்டார்கள் என்றும் அதற்கு நாங்களும் சம்மதித்து ஒருநாள் காலை எதிரி மகேந்திரன் என்பவரை போலிசார் கைது செய்து எங்கள் முன்னிலையில் மகேந்திரன் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் கொலை செய்ததை ஒத்துக்கொண்டார் என்றும். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், லெட்சுமிபதியும் கையொப்பம் செய்தோம் என்றும் அதே போல மேலும் கொலை செய்ய பயன்படுத்திய இருசக்கர மோட்டார் சைக்கிள் மற்றும் இறந்த நாராயணணின் சட்டை கைப்பை, டவல் ஆகியவை ஒப்படைப்பதாக கூறினார் என்றும். மேற்கண்ட பொருட்களை மகேந்திரன வசிக்கும சாலிகிராமத்தில் காந்திநகரிலிருந்து எடுத்து ஆஜர் செய்ததை போலிசார் எங்கள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும் அந்த மகசரில் நானும், லெட்சுமிபதியும் கையொப்பம் செய்தோம் என்றும், மேலும் அதே தினத்தில் அழகிரி தெருவில் பிரியா என்பவரை கைது செய்து அவர் தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் லெட்சுமிபதியும் கையொப்பம் செய்தோம் என்றும் அதே போல் அதே தினத்தில் கெருகம்பாக்கம் பாரதிநகரில் நுறுமுகமதை கைது

செய்தார்கள் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்கமூலத்தை நானும் லெட்சுமிபதியும் கையொப்பம் செய்தோம் என்றும் மேலும் மேற்கண்ட எதிரி கோவிந்தநாயுடு மாந்தோப்பில் எடுத்து ஆஜர் செய்த பொருட்களை போலிசார் கைப்பற்றினார்கள் என்றும் அந்த மகசரில் நானும் லெட்சுமிபதியும் கையொப்பம் செய்தோம் என்றும் அதன் பிறகு போலிசார் அவர்களை காவல்நிலையம் அழைத்து சென்றார்கள் இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்று கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறனே் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneeme
I Additional District & Sessions Judge,
Tiruvallur.

வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC.579/2006 |
| வழக்கு சாட்சி | : | PW 5 |
| நாள் | : | 15.06.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லெட்சுமிபதி | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | பார்த்தராஜ் | தொழில் | : | |
| கிராமம் | : | வெங்கத்துர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**எதிரிகள் ஆஜரில்லை**

**முதல் விசாரணை**

நான் வெங்கத்துர் கிராமத்தில் வசித்து வருகிறேன். தற்போது ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறேன். சுமார் 24 வருடங்களுக்கு முன்பு நடந்த கொலை வழக்கில் தற்போது எனக்கு ஞாபகமில்லை ஆனால் போலிசார் என்னிடம் சில பேப்ரில் கையெழுத்து வாங்கினார்கள். நாங்கள் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தோம். மகேந்திரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், ஏழுமலையும் கையொப்பம் செய்தோம் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் என்னுடையது தான். அது **அதசாஆ 8 ஆகும்.** அதே போல் கைபற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த கையொப்பம் **அதசாஆ 9 ஆகும்.** மேலும் அதே தினத்தில் அழகிரி தெருவில் எதிரி பிரியா என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **அது அதசாஆ 10 ஆகும்.** அதே போல் அதே தினத்தில் கெருகம்பாக்கம் பாரதிநகரில நுறுமுகமதை கொடுத்த ஒப்புதல வாக்கமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அது **அதசாஆ 11 ஆகும்.** அதே போல மேற்கண்ட எதிரியிடமிருந்து கைபற்றப்பட்ட மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கைபற்றுதல் மகசர்

**அதசாஆ 12 ஆகும்.** அதன் பிறகு போலிசார் அவர்களை காவல்நிலையம் அழைத்து சென்றார்கள் இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வெங்கத்துர் கிராமத்தில் வசித்து வருகிறேன். தற்போது ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறேன். சுமார் 24 வருடங்களுக்கு முன்பு மணவாளநகர் காவல் ஆய்வாளர் என்னிடமும், எங்கள் கிராமத்தை சேர்ந்த ஏழுமலையிடமும் சுமார் 3 மாதங்களுக்கு முன்பு கொலை செய்த குற்றவாளிகள் வடபழனியில் இருப்பதாகவும் அவர்களை கைது செய்ய வேண்டுமென்றும் அதற்கு நீங்கள் சாட்சியாக இருக்க வேண்டுமென்று கேட்டார்கள் என்றும் அதற்கு நாங்களும் சம்மதித்து ஒருநாள் காலை எதிரி மகேந்திரன் என்பவரை போலிசார் கைது செய்து எங்கள் முன்னிலையல் மகேந்திரன் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் கொலை செய்ததை ஒத்துக்கொண்டார் என்றும். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், ஏழுமலையும் கையொப்பம் செய்தோம் என்றும் அதே போல் மேலும் கொலை செய்ய பயன்படுத்திய இருசக்கர மோட்டர் சைக்கிள் மற்றும் இறந்த நாராயணனின் சட்டை, கைப்பை, டவல் ஆகியவை ஒப்படைப்பதாக கூறினார் என்றும். மேற்கண்ட பொருட்களை மகேந்திரன் வசிக்கும் சாலிகிராமத்தில் காந்திநகரிலிருந்து எடுத்து ஆஜர் செய்ததை போலிசார் எங்கள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும் அந்த மகசரில் நானும், ஏழுமலையும் கையொப்பம் செய்தோம் என்றும், மேலும் அதே தினத்தில் அழகிரி தெருவில் பிரியா என்பவரை கைது செய்து அவர் தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் ஏழுமலையும் கையொப்பம் செய்தோம் என்றும் அதே போல் அதே தினத்தில் கெருகம்பாக்கம் பாரதிநகரில் நுறுமுகமதை கைது செய்தார்கள் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்கமூலத்தை

நானும் ஏழுமலையும் கையொப்பம் செய்தோம் என்றும் மேலும் மேற்கண்ட எதிரி கோவிந்தநாயுடு மாந்தோப்பில் எடுத்து ஆஜர் செய்த பொருட்களை போலிசார் கைப்பற்றினார்கள் என்றும் அந்த மகசரில் நானும் ஏழுமலையும் கையொப்பம் செய்தோம் என்றும் அதன் பிறகு போலிசார் அவர்களை காவல்நிலையம் அழைத்து சென்றார்கள் இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்று கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறனேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.